# வே.புதுக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை திரு.ச.குப்புச்சாமி M.A

ந.க.எண்: 01/2024/ நாள்: 15.04.2024

பொருள்: மனைப்பிரிவு அனுமதி - வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம் வே.புதுக்கோட்டை ஊராட்சி / கிராமம் புல எண்: 357/1A2 அமையும் 8905.சமீ ( 2.20ஏக்கர்) பரப்பளவு இடத்தில் மனை எண்கள்: 1 முதல் 44 வரை உள்ள மனைகளாக பிரிக்கப்பட்டு உதவி இயக்குநர் நகர் ஊரமைப்பு துறை திண்டுக்கல் - தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைகளை அங்கீகரித்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:

1. திரு.வே.செந்தில்குமார், கோலார்பட்டி,கல்வார்பட்டி (அஞ்சல்) நாள்: 10.03.2024
2. உதவி இயக்குநர்,மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் ந.க.எண்: PJMDIQ75/2024/TCP நாள்:29.12.2023
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 19799/2020/போ. நாள்: 24.12.2020
4. மாவட்ட வன அலுவலர் திண்டுக்கல் வன கோட்டம்,கடிதம் ந.க.எண்:2271/2022/வ.1 நாள்:25.03.2022
5. அரசாணை எண் 138 ,வீட்டு வசதி மற்றும் நகர் வளர்ச்சி துறை நாள் : 04.06.2004
6. அரசாணை நிலை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சித்துறை நாள்: 04.05.2017
7. அரசாணை நிலை எண் 18. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நாள்: 04.02.2019 மற்றும் மற்றும் அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020
8. அரசாணை எண் 141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை UD4(3) நாள்: 23.03.2020
9. அரசாணை எண் 141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை UD4(1) நாள்: 09.12.2020
10. அரசு கடித எண் 19113/ந.வ.4 (3)/2017-1 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 30.08.2017
11. ஆணையர் ,நகர் ஊரமைப்பு சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்: 13686/2017/எல்.ஏ.1 நாள்:09.09.2017
12. தலைவர், வே.புதுக்கோட்டை ஊராட்சி கடிதம் ந.க.எண்: 1/2024 நாள்: 13.03.2024
13. அரசு தலைப்பு செ.சீ.எண்: 20240412001328,நாள் :12.04.2024
14. ஊராட்சி பல்வகை வரவு இரசீது எண்:2024-2025/22/11/18/7/1 நாள்: 12.04.2024
15. தீர்மான எண்: 205 நாள்: 14.03.2024

**********

**உத்தரவு**

திண்டுக்கல் மாவட்டம் ,வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம், வே.புதுக்கோட்டை ஊராட்சி /கிராமம் புல எண்: 357/1A2 அமையும் 8905.சமீ ( 2.20ஏக்கர்) பரப்பளவு இடத்தில் மனை எண்கள்: 1 முதல் 44 உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அரசுதலைப்பில் மனுதாரர் செலுத்த வேண்டிய கட்டண விபரங்களை குறிப்பிட்டு பார்வை 16 ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக அறிவிப்பு செய்யப்பட்டது. மனுதாரர் மேற்படி அறிவிப்பின்படி தொகை ரூ.153910/- ( ஒரு லட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து தொளாயிரத்து பத்து மட்டும் ) ஊராட்சி கணக்கிலும் மற்றும் ரூ.14200/- (ரூபாய். பதினான்காயிரத்து இருநூறு மட்டும்) அரசுத்தலைப்பிலும் செலுத்தியுள்ளார். எனவே, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனை எண்கள்: 1 முதல் 44 ஆக மொத்தம் 44 மனைகளுக்கு வே.புதுக்கோட்டை ஊராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் மனைபிரிவு அனுமதி அளித்து இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலையின் அமைப்புகள்,அளவுகள்,பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையினை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணம் கொண்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கு ஊராட்சி பகுதிக்கு குறைந்தது 3 மீட்டர், அளவுள்ள திறந்த வெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்க திறந்தவெளியில்கிணறுகள்,கழிப்பறை,எருக்குழி, மாட்டுத்தொழுவம்,கார்செட், கொட்டகை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச்சார்ந்த கட்டிடம் மற்றும் அமைக்கப்பட வேண்டும். ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையில் நீளத்தில் மூன்றில் ஒருபாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நிலமட்டத்திலிருந்து 3 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
3. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை பெருமட்டத்திற்கு உயர்த்த வேண்டும்.
4. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைகளுக்கான மனையை வரைபடத்தில் கட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்படவேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்தபடவேண்டும்.
5. விற்பனைக்கு உண்டான மனைகளை விற்பனை செய்யும்பொது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகலினை மனையினை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவின் நுழைவுவாயிலில் 6 x 4 வரையிலான நிரந்தர தகவல் பலகையின் மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்படவேண்டும்.

இணைப்பு: அங்கீகரிக்கப்பட்ட வரைபட பிரதிகள்

தலைவர்
V. புதுக்கோட்டை ஊராட்சி
ஊராட்சி மன்ற தலைவர்
வே.புதுக்கோட்டை ஊராட்சி

பெறுநர்
திரு செந்தில்குமார் வே,
கோலார்பட்டி,
கல்வார்பட்டி(அஞ்சல்)